தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal
eISSN: 3049-0723
Vol. 2 Issue: 02 September 2025

# சங்க இலக்கியங்கள் காட்டும் தற்கால சட்ட முன்வரைவுகள்

## Contemporary Legal Blueprints Reflected in Sangam Literature

**திருமதி ம. புவனேஸ்வரி[1], முனைவர்.இ. ஆர். இரவிச்சந்திரன்[2],**

[1]ஆய்வாளர், பதிவெண்: 12089/Ph.D/K8/ Tamil/ Part time/ July 2015, உருமுதனலெட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி-620019

[2]ஆய்வு நெறியாளர், முதல்வர், உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 620019.

[1]**Mrs. M. Bhuvaneswari**, B.Lit., M.A., PGDCA Research Scholar,
Register No: 12089/Ph.D/K8/Tamil/Part-time/July 2015, Urumu Dhanalakshmi College, Kattur, Trichy - 620019.
E-mail: mbuvana.ramesh@gmail.com

[2]**Dr. E.R. Ravichandran**, M.A., M.Phil., Ph.D. Research Supervisor, Principal, Urumu Dhanalakshmi College, Tiruchirappalli - 620019.

**Abstract:**

This research paper employs a comparative approach to investigate the congruence between contemporary legal statutes and the ethical and social tenets of the Tamil lifestyle described in classical Sangam literature. The Sangam poems reveal that the ancient Tamils prioritized principles of democratic governance and communal consensus from very ancient times. Our classical texts portray the monarch (known as the Vendhar) as the supreme ruler responsible for ensuring the welfare and comprehensive protection of the citizenry. In this structure, service to the people was held in the highest possible regard.

Scholars and advisors were appointed to keep the rulers informed of the state of the nation. The Poets (Pulavars) served as essential conduits, communicating the status of the populace, the military strength of neighboring kingdoms, and the prevailing sentiments of the nation to the monarch. Crucially, as reflected in ancient literature, the Pulavars possessed the right not only to eulogize the king but also to openly critique and correct his errors and failures. The objective of this study, supported by substantive evidence, is to demonstrate that just as modern constitutions codify specific citizen rights, the political structure of ancient Tamilakam mandated that the king govern by keenly understanding and fulfilling the fundamental needs of the people. This reveals a sophisticated, ancient system prioritizing the well-being of the populace that mirrors the intent of modern legal blueprints.

**Keywords:** legal statutes, ethical and social tenets, Tamil lifestyle, classical Sangam literature

**ஆய்வுச் சுருக்கம்:**

இந்த ஆய்வுக்கட்டுரையானது தற்காலச் சட்டங்கள், செவ்வியல் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் தமிழர் வாழ்வியல் நெறிகளோடு எந்தெந்த வழிகளில் ஒத்து இருக்கிறது என்பது குறித்து ஒப்பியல் நோக்கில் ஆராய்கிறது. தமிழர்கள் பண்டைய காலந்தொட்டே மக்கள் ஆட்சிக்கு முக்கியத்துவம் அளித்து இருந்ததைச் சங்கப் பாடல்கள் வழி அறிய முடியும். நமது இலக்கியங்கள் மன்னரை வேந்தராகவும் மக்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குபவராகவும் குறிப்பிடுகின்றன. மக்களுக்கு ஆற்றும் சேவையை உயர்வாகக் கருதினர். மன்னர்களுக்கு நாட்டின் நிலையை உணர்த்த அறிஞர்கள்

Tamilmanam

இருந்தனர். நாட்டு மக்களின் நிலை, அண்டை நாட்டு மன்னர்களின் படைபலம், நாட்டு மக்களின் உணர்வுகள் ஆகியவற்றை மன்னனுக்கு எடுத்துக்காட்டும் கருவியாகவே புலவர்கள் இருந்து வந்தனர். பண்டைய இலக்கியங்களில் மன்னரைப் புகழ்ந்து பாட மட்டுமின்றி, அவரது தவறுகளை இடித்துரைக்கும் உரிமையும் புலவர்களுக்கு இருந்தது. நமது நாட்டு அரசியலமைப்புப்படி மக்களுக்கு என்ன உரிமைகள் உள்ளது என வரையறை செய்யப்பட்டுள்ளதோ அதுபோல பண்டைய தமிழகத்தில் மக்களுக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து மன்னன் அரசாள வேண்டும் என்கிற நிலை இருந்து வந்துள்ளது என்பதை உரிய சான்றுகளோடு வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

**சிலம்பில் அரசும் அரசியலும்:**

மாந்தர் தம் இன்றைய நடப்பையும், நேற்றைய நடப்பையும் அவற்றுக்கு முற்பட்ட நடப்பையும் ஒப்பிட்டு பார்க்கும் போது இன்று போல முன்னைய மாந்தர் இருந்திரார் என்ற அடிப்படை செய்தி பல்வேறு ஊகங்களை உருவாக்குகிறது. தமிழக வரலாற்றை பொறுத்தவரை தந்தைக்கு பின் மகன் அரசு பொறுப்பினை ஏற்று வருவது பல நூற்றாண்டு காலமாகவே இருந்து வருகிறது. பெண்கள் வாரிசாக அரசாண்ட வரலாறு இல்லை. வாரிசுக்கு உரிய மகன் இளையவனாயினும் அவன் வரசனாகவே அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளான். சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட சங்ககால அரசு அமைப்பிலிந்து பின்வரும் செய்திகளை அறியமுடிகிறது.

**அரசமுறை:**

அரசனுக்கு பிறகு அவரது ஆண்மகனே அரசனாக பொறுப்பினை ஏற்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அவன் வயது பற்றிய தடை ஏதும் இருந்ததில்லை என அறியமுடிகிறது. சிலப்பதிகார பதிகத்தில் சேர மன்னன் ஒருவன் இறந்துவிட அவருக்கு அடுத்த அரசுப்பொறுப்பு ஏற்பபிற்கு உரியவர் மூத்த மகன் சேரன் செங்குட்டுவன் அல்லன் என்றும், அவரது தம்பியாகிய இளங்கோவடிகளே என்றும் கணிகன் ஒருவன் குறிப்பிடுகிறான். அது கேட்ட இளங்கோவடிகள் எக்காலத்தும் அதுபோல நடக்கமாட்டேன் எனக்கூறி துறவு மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. தந்தைக்கு பின் மூத்த மகன் அரசு பொறுப்பேற்றதையும், இளைய மகன் சிலவிடங்களில் பொறுப்பேற்றதும் அறியமுடிகிறது. அரசர் அரசவையில் அமர்ந்நதிருக்கும் போது அரசியும் உடனிருந்ததை பெரும்பாலான இலக்கியங்களில் காட்டப்படுகிறது. ஆனால் அவர் எதுவும் பேசியதாக ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அரசியை அரசன் நெடுந்தொலைவு அழைத்து சென்றதையும் நமது இலக்கியங்கள் வழியே காணமுடிகிறது. ஆளும் அரசரை மக்கள் எளிதாக பார்க்கமுடியும் என்பதை சேரன் செங்குட்டுவனை கானவர் நேரில் பார்க்கும் செய்தியும், பாண்டியன் நெடுஞ்செழியனை கண்ணகி நேரில் பார்க்கும் செய்தியும் தெரிவிக்கின்றன. நாட்டில் உள்ள அக்றிணை உயிர்க்கு கூட அநீதி நேர்ந்துவிடக்கூடாது என்பதை மனுநீதிசோழன் வரலாறு காட்டுகிறது.

தமிழரசர், தமிழ் மேலும் மக்கள் மேலும் பெரும்பற்று கொண்டிருந்தனர் என்பதை அறியமுடிகிறது. வடபுலத்து அரசரான கனகவிசயர் தமிழரசரை அவமானப்படுத்தினர் என்ற செய்தியை கேள்விப்பட்ட அளவில் சேரன் செங்குட்டுவன் பொங்கி எழுந்து சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படையெடுத்து

சென்று கனகவிசயரை வென்று இமயமலையில் கண்ணகிக்கு சிலையெடுக்க கல்எடுத்து அதனை கனகவிசயரை சுமக்க செய்து கோயில் கட்டிய செய்தியை அறியமுடிகிறது.

**சிலப்பதிகார கால தமிழர் நெறிகள்:**

சிலப்பதிகார காலத்திற்கு முன்னர் அதாவது சங்க காலத்தில் தலைவனும் தலைவியும் தம்முள் காதல் கொண்டு மணம் முடித்ததாக சொல்வர். ஆனால் சிலம்பில் இருவருக்கும் பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடந்ததை அறியலாம். இதனை “இருபெருங்குரவரும் ஒரு பெரு நாளால் மணவணி காண மகிழ்ந்தனர்” 1 என்ற பாடல் வழியே அறியமுடிகிறது. திருமணம் முடிந்தவுடன் தனிக்குடித்தனம் வைக்கும் வழக்கம் இருந்ததை சிலம்பில் அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் பரத்தையர் மீது காதல் கொள்வது குறித்தும் விவாதிக்கப்படுகிறது. மாதவியின் மகளான மணிமேகலைக்கு தனது குல தெய்வ பெயரான “மணிமேகலை” என பெயர் சூட்டியுள்ளதிலிருந்து அக்காலத்தில் இருந்த குலதெய்வ வழிபாடு முறைபற்றி அறிய முடிகிறது.

**நீதி வழங்குதல்:**

அரச நீதி என்பது நாட்டு மக்களை துயரங்களிலிருந்து காத்தலேயாகும். நீதி வழுவாமையே கொற்றம் எனப்பட்டது. அறநெறி முதற்றே அரசின் கொற்றம் எனும் புறப்பாடல் அடி கொற்றம் என்பது அறத்தை வலியுறுத்துவதை காணமுடிகிறது. முறை செய்து காப்பாற்றும் மன்னன் கதிரவனுக்கு ஒப்பாக கருதப்பட்டார். பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் தன்னிடம் நீதி கேட்டு வழக்குரைத்த கண்ணகிக்கு தன்னுயிர் ஈந்து நீதி வழங்கிய முறைமையை

தாழ்ந்த குடையன் றளர்ந்த செங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன் 2 என்ற சிலப்பதிகார பாடல் வழி அறியலாம்.

அது போல மக்களுக்கு தனது நாட்டில் உள்ள அடிப்படை உரிமைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெளிவான விளக்கங்களுடன் எடுத்துரைக்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டமானது 1950ம் ஆண்டு, ஜனவரி-26ம் தேதி நடைமுறைக்கு வந்துள்ளது. உயர்ந்தபட்ச சட்டவிதிகளை தன்னகத்தே கொண்டுள்ள ஒரு குடியரசு நாட்டிற்குண்டான அனைத்து வரையறைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. உலகிலேயே நீளமான அரசியலமைப்பு நமது நாட்டினுடைய அரசியலமைப்;பு ஆகும். கூட்டாட்சி, நெகிழும் மற்றும் நெகிழாத்தன்மை கொண்டது. இந்திய அரசியலமைப்பு சட்டமானது அடிப்படை அரசியல் கொள்கைகள், அரசாங்க நிறுவனங்களின் கட்டமைப்பு, நடைமுறைகள், உத்தரவுக்கொள்கைகள், அடிப்படை உரிமைகள்,குடிமக்களின் கடமைகள் என அனைத்தையும் உள்ளடக்கியது. இந்திய அரசியலமைப்பின் முதல் அத்தியாயத்தில் நாட்டின் பெயர்,

ஆட்சிப்பரப்பு ஆகியனவும், இரண்டாவது அத்தியாயத்தில் குடிமை (ஊவைணைநளொip) பற்றியும்; சொல்லப்பட்டுள்ளது.

அவற்றுள், இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுபு-14 ஆனது

“சட்டத்தின் முன் அனைவரும் சமம், இந்தியாவிற்குள் அனைவரும் சம பாதுகாப்புக்குரியவர்கள்”3 என்றும் எந்த நபருக்கும் சட்டத்தின் முன் சம உரிமையையும் இந்திய நிலவரையில் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பையும் அரசு மறுக்கக்கூடாது என்பதை தெளிவாக உணர்த்துகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுபு-15 (1) ஆனது “சமயம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் அல்லது வேறு எதன் பேரிலும், எந்த ஒரு குடிமகனுக்கு எதிராக அரசு வேறுபாடு காட்டக்கூடாது”4 என்பதை தெள;ளத்தெளிவாக உணர்த்துகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுபு-16 ஆனது “குடிமகன் எவரையும் சமயம், இனம், சாதி, பாலினம், பாரம்பரியம், பிறப்பிடம், உறைவிடம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றைக் காரணம் காட்டி, அரசுப்பணியில் நியமிக்கப்படுவதற்கும் அல்லது வேறு எந்த பணி ஆற்றுவதற்கும் தகுதியற்றவர் என்று கூறவும் பாகுபாடு காட்டவும் கூடாது” 5என்பதை வரையறுத்துக் கூறுகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் உறுபு-17 ஆனது “தீண்டாமை எந்த விதத்தில் இருந்தாலும் அது தண்டிக்கத்தக்கக் குற்றமே. சட்டப்படி கடுமையான நடவடிக்கைக்குரிய குற்றமாகவே தீண்டாமை கருதப்படும்” 6என்பதை குறிப்பிடுகிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு -32ல் இத்தகைய “அடிப்படை உரிமைகளை காத்துக்கொள்ள குடிமக்கள் யார் வேண்டுமானாலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர உரிமை உண்டு”7 என்பதைப்பற்றி குறிப்பிடுகிறது.

**குற்றமும் தண்டனையும்:**

தீர்ப்பு மனச்சான்றின்படி வழங்கப்பட்டதற்கு பொற்கை பாண்டியன் எனும் வேந்தர் எடுத்துக்காட்டப்படுகிறார். குற்றத்திற்கு கடுமையான தண்டனை வழங்கப்பட்டது. அரசனின் தோட்டத்திலிருந்து விழுந்த மாங்கனியை உண்டதற்காக பெண் ஒருத்திக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஒரு பெண்ணை காதலித்து கைவிட்டவனுக்கு வழங்கப்பட்ட தண்டனை பற்றி அகநானூறு

கரும்பமல்; படப்பை பெரும்பெயர் கள்ளூர்த்
திருநுதற் குறுமக ளணிநலம் வவ்விய ‘
அறனி லாள னறியே டினன்ற
திறனில் வெஞ்சூ ளறிகரி கடாஅய்
முறியார் பெருங்கிளை செறிய பற்றி

நீறு தலைப்பெய்த ஞான்றை 8 குறிப்பிடுகிறது. குற்றத்திற்கு அரசன் கொடுத்த தண்டனை பெரியதாக கொடியதாக இருந்த போதிலும் அது அவனது கடமையாகவே கருதப்பட்டு வந்துள்ளது. இதனை திருவள்ளுவரும் குடிபுறங் காத்தோம்பி குற்றங் கடிதல் வடுவென்று வேந்தன் தொழில் என்று

குறிப்பிடுவர். குற்றம் புரிந்தோருக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்ட சான்றுகளும் காணமுடிகிறது. சிறைகோட்டத்தில் குற்றம் செய்தவர்கள் அடைக்கப்பட்டு இருந்ததை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. குற்றவாளிகள் மட்டுமின்றி போரில் தோற்ற பகை மன்னர்கள் மற்றும் பகை நாட்டு மக்களும் சிறையில் அடைக்கப்பட்டு இருந்தனர். தண்டனைகள் யாராக இருந்தாலும் கடுமையாகவே வழங்கப்பட்டு இருந்தது. குற்றத்தின் தன்மைக்கு ஏற்ப தண்டனைகள் வழங்கப்பட்டு இருந்தன.

**புறநானூறு காட்டும் அரசியல்:**

சங்க காலம்; தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் இன்று வரை நாம் மதித்து போற்றுதற்குரிய இலக்கிய படைப்புகளை தன்னுள்ளே கொண்டுள்ள காலமாகும். மன்னராட்சிமுறை உலகம் முழுமையும் இருந்துள்ளது. மன்னன் உயரித்தே மலர்தலை உலகம் என்று சான்றோர் உரைத்தனர். மக்களின் நலவாழ்வு மன்னனின் நல்லாட்சியை பொறுத்தே அமையும். நன்மைகள் தோன்றுதற்கும் தீமைகள் உருவெடுப்பதற்கும் மன்னனே காரணம் என கருதப்பட்டது. ஆபயன் குன்றும் ஆறு தொழிலோர் நூல் மறப்பர் காவலன் காவான் எனின் என்பார் வள்ளுவர் நாட்டில் நல்லொழுக்கம் நிலவ வேந்தன் காரணமாக இருத்தல் வேண்டும். ஒரு நாட்டின் உயர்வுக்கும் வெற்றிக்கும் படைவீரன் பெருங்காரணமாக உள்ளான் என்பதை வலியுறுத்தலே களிறெறிந்து பெயர்தல் காளைக்கு கடனே என சொல்லப்பட்டது. சங்க கால மக்கள் போரினை கலையாக கருதினர். உலகின் நலனுக்கு மன்னனின் ஆட்சி தான் உயிர் என கூறப்பட்டது.

நாட்டில் உள்ள குடிமக்கள் உடலைப்போன்றவர்கள். அவர்களின் உயிராய் பொருந்தி இருக்க வேண்டியது மன்னனே என குறிப்பிடுவர். செங்கோன்மை தவறாத மன்னன் ஆளும் நாட்டில் மழை பெய்யும் விளைச்சல் பெருகும். சோழன் குளமுற்றத்து துஞ்சிய கிள்ளிவளவனை வெள்ளுக்குடி நாகனார் கீழ்கண்டவாறு குறிப்பிடுவார்.

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லவன் செயற்கையின் தோன்றினும்
காவலர் பழிக்குபிக் கண்ணகன் ஞாலம்
அதுநற் கறிந்தனை யாயின் நீயும்
நொதும் லாளர் பொதுமொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறம் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே
பகடு புறந்தருநர் பாரம் ஓம்பி (புறம் 35) 9

குடிப்பழி தூற்றும் பழிக்கு மன்னன் ஆட்படுவதை விரும்ப மாட்டான். பிற்காலத்திய நீதிநூல்களான இன்னநாற்பதும் கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா எனக்குறிப்பிடும்.

மன்னரும் செங்கோலும்:

அக்கால மன்னர்கள் பழிக்கு அஞ்;சியிருக்கிறார்கள். செங்கோல் தவறினால் உயிர்விடத்துணிந்து இருக்கிறார்கள் என்பதை சிலப்பதிகாரத்தில் செங்கோல் வளைந்ததால் மன்னன் மாண்டது போல காட்டுவார்கள். அவன் தன்னுயிர் நீத்து செங்கோல் நிமிர்த்தியது போல அமையும். குடிப்பழித்தூற்றும் பழிக்கு மன்னன் ஆட்படுவதை விரும்பமாட்டார்கள். பிற்காலத்து நீதி நூலான இன்னாநாற்பது "கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னா" எனக்குறிப்பிடும்.

**அரசியலமைப்பு சட்டம்:**

இன்றைய அரசியலமைப்பு தெளிவான வரையறைகளை தன்னகத்தே பெற்றுள்ளது. ஆனால் அக்கால மன்னராட்சியில் முறையான வரையறைகள் இல்லாத போதும் நாட்டை ஆளும் மன்னனுக்கும் அங்கு வசிக்கும் மக்களுக்கும் பொறுப்புகள் எல்லைகள் விதிகள் விதிவிலக்குகள் கொள்கைகள் என எல்லாம் வகுக்கப்பட்டிருந்தன. மக்களின் நலன் கருதியே பெரும்பான்மை போர்கள் நடைபெற்றன. மக்கள் வாழ்வுரிமையை மீட்கும் போராட்டமாக சில போர்கள் முன்னிறுத்தப்பட்டன. மன்னன் மக்களுக்கு அரணாக இருக்க வேண்டும் என்பதையே போர்கள் அறிவுறுத்தியிருந்தன என்றே கூறலாம். மக்கள் மன்னனிடம் அரசவையில் முறையிடும் வழக்கம் இருந்ததையும், மன்னன் மக்களுக்காக பல தியாகங்களை செய்து முறையாக நீதிவழங்கியதையும் சங்க இலக்கியங்கள் அழகுற எடுத்து காட்டுகின்றன.

**இன்றைய தண்டனைகளுக்கான பொது விலக்குகள்**:

இன்றைய இந்திய தண்டனைச்சட்டம் குற்றம் மற்றும் அதற்குரிய தண்டனைகளில் சில பொது விலக்குகளையும் வரையறுத்துள்ளது. அதன்படி குற்றப்பொறுப்புரிமையில் (உசiஅiயெட டயையடிடைவைல) இருந்து, கீழ்கண்ட செயல்கள் விலக்களிப்பு (நஒஉநிவழைn) பெற்றுள்ளன.

1. இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 76ல் "சட்டத்தினால் குறிப்பிட்ட ஒன்றைச் செய்யக் கடமைப்பட்ட ஒருவரின் செயல்" 10 என தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.
2. சட்டப்பிரிவு 77ல் "நீதிமுறைப்படி செயல்படும் ஒரு நீதிபதியின் செயல் யுஉவ ழக தரனபந யஉவiபெ தரனiஉயைடடல" 11 என இந்திய தண்டனைச் சட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது.
3. பிரிவு 82-ல் "ஏழு வயதுக்குட்பட்ட குழந்தையின் செயல் - யுஉவ ழக ய உhடைன ரனெநச 7 லநயசள" 12

இது போன்ற பல்வேறு இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகளில் விலக்குகள் வரையறுக்கப்பட்டு உள்ளன. அவை குற்றம் நடைபெற்ற சூழலைக் கருத்தில் கொண்டு மாறுதலுக்கு உட்பட்டு;ள்ளன என்பதை அறிய முடிகிறது.

சமுதாயம்:

'சமுதாயம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் ஆறுவகையான பொருள்கள் வழங்கி வருகின்றன. அவை: மக்களின் திரள், பொருளின் திரள், கோயிலின் நிருவாக அதிகாரிகளின் கூட்டம், பொதுவானது, பொதுவாகவேனும் அவரவர்க்குரிய பங்குப்படி பிரித்தேனும் அனுபவிக்கப்படும் ஊர்ப்பொதுச் சொத்து, உடன்படிக்கை என்பன (தமிழ் லெக்சிகன். ப.1302).13

இவற்றில், 'மக்களின் திரள்' என்னும் முதற் பொருளில் 'சமுதாயம்' என்னும் சொல் இப்பொழுது வழங்கப்படுகிறது. சமுதாயம் என்னும் சொல் சங்க இலக்கியங்களில் சுட்டப்பெறவில்லை. ஆனால், சமூகம் என்னும் சொல் உணர்த்தும் பொருண்மையோடு, 'மன்பதை' என்னும் சொல்லைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. 'மன்பதை காக்கும்நின்புரைமை' (புறம்.210:1), 14 'உலகத்து மன்பதைக் கெல்லாம்'(புறம்.358) 15 'மன்பதை யெல்லாம் மடிந்த இருங்கல்குல்' (கலி.65) 16 என்பனவற்றில், மன்பதை என்னும் சொல் 'மக்கட்பரப்பு' மக்கள் கூட்டம்' அல்லது 'உயிர்க்கூட்டம்' என்னும் பொருளில் அறியப்படுகிறது.

'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக இல்' (25:103-104)

என்று சிலப்பதிகாரத்திலும், 17

'மன்பதைக்கு எல்லாம் அன்பு ஒழியார்' (23:137)

என்றும் மணிமேகலையிலும் 18 மன்பதை என்னும் சொல் பயின்று வந்துள்ளது. இவற்றில், மன்பதை என்பது 'உயிர்ப்பன்மை' என்னும் பொருளைக் கொண்டுள்ளது. ஆனால், இக்காலத்தில் 'சமுதாயம்' என்னும் சொல் ஓரளவிற்குச் சுருங்கிய பொருளில் 'சொசைட்டி' (ளுழஉநைவல) என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு நேரான சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. 'சொசைட்டி' என்னும் ஆங்கிலச் சொல் பல்வேறு பொருள்களை உணர்த்துகிறது. 'கூடிச்செயற்படுவதில் நாட்டத்தையும்இ பொதுவான நோக்கங்களையும் பற்றார்வத்தையும் உடையதாய் உள்ள சமூகமோ, நாட்டினமோ, பரந்துபட்ட மக்கள் கூட்டமோ சமுதாயம் எனப்படும் (தமிழக வரலாறு சங்ககாலம்-வாழ்வியல், ப.2). 19 தற்போது சமூகம், சமுகாயம் என்ற சொல்லாக்கங்களும் சமுதாயம் என்பதற்கு இணையானச் சொற்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உயிரின வளர்ச்சிக்கும் அவற்றின் பாதுகாப்பிற்கும் சார்ந்து வாழ்தலும் கூடி வாழ்தலும் இன்றியமையாததாகிறது. கூடி வாழ்தலால் உயிர்கள் தங்கள் தேவைகளை எளிதில் பெற முயல்கின்றன. இவ்வெற்றியின் பயனாகவே மனிதன் பண்டைக்காலம் முதல் இன்றுவரை கூட்டு வாழ்க்கையை ஏற்று வாழ்ந்து வருகிறான் என்பது மனித இன வரலாற்றின் வாயிலாக அறியப்படுகிறது. இவ்வகை இனக்குழுவையும் இனக்குழுவின் தலைவனையும் சங்கப்பாடல்கள் பலவற்றில் காணமுடிகிறது. பெருவேந்தருக்கு நிகராக இவ்வகை இனக்குழுத் தலைவர் போற்றப்பட்டுள்ளனர். 'சமுதாயம் என்னும்; சொல் இன்றைய சமுதாயத்தை விளக்குகின்றது ; குழு என்னும் சொல் பண்டைக்காலச் சமுதாயத்தை (Pசிஅவைஎந ளழஉநைவல) ஓரளவு எடுத்து விளக்கியுள்ளது' (சமூகவியல், ப.11) 20 என்பர். எனவே, தனிமனிதர், குடும்பம், அரசு என்ற பல்வகை நிலைகளிலிருந்தும் வெளிப்பட்டு நிற்கும் விழுமியங்களான சமூக மதிப்பீடுகளை இனங்காண்பது ஏற்புடையதாகிறது.

**தனிமனிதனும் சமூகமும்**

தனிமனித சிந்தனைகளின் ஒருங்கிணைப்பே சமூக வளர்ச்சிக்கு அடித்தளமாகிறது. நற்சிந்தனைகளைக் கொண்ட மனிதர்கள் வாழும் சமூகமே வளர்ச்சிப் பாதையில் முன்னணியில் நிற்கிறது.

‘ஒவ்வொரு தனி மனிதனும் அவனுடைய எண்ணம், செயல் ஆகியவற்றால் எல்லா மக்களுக்கும் நன்மைபயக்க வேண்டும் என்பதை எண்ணினால் சமுதாயம் முன்னேற்றமடைவதில் ஐயம் இல்லை’ (சமூகவியல், ப.170) 21 என்பது தனிமனிதனுக்கான சமூகவியல் கோட்பாடாக அமைகிறது.

**தமிழ்ச்சமூகம்:**

தனிமனிதன், ஒரு குடும்பம்-குழு-அரசு போன்றவற்றில் இணைந்தே செயல்படுகின்றான். சமுதாயம் தனிமனிதனைச் சமுதாய உறுப்பினராக்கப் பெருமளவிற்குத் தொண்டு புரிகின்றது. அவ்வகையில், தனிமனிதர், குடும்பம் மற்றும் தலைமையின் விழுமியங்களுள் முக்கியக் கூறுகளாக, விருந்தோம்பல், உடை வழங்கல், கொடை, உடைமையைப் பங்கிட்டுக் கொடுத்தல், பெற்ற பெருவளம் பெறாதோர்க்கு அறிவுறுத்தல்-வழங்கல், இருப்பிடம் அளித்தல், அருளுணர்வு, உயிரிரக்கம் போன்றவை அமைகின்றன. இவற்றின் செயலாக்கக் காரணிகளுள் (தனிமனிதர், குடும்பம், அரசு) ஒன்றிலிருந்து ஒன்றும் ஒன்றுக்குள் ஒன்றுமாக அமைவதைக் காணமுடிகிறது. மேலும், சமூக அமைப்பிலிருந்து விலகி நிற்க முயலும் தனிமனிதனையும் சமூகத்தோடு இணைக்கும் கருத்தாக்கங்களும் பழந்தமிழகத்தில் வெளிப்பட்டு நிற்கின்றன. சமூகத்திலிருந்து விலகி நிற்கும் இவ்வகைத் தனி மனிதச் செயல்களை,

‘தானும் உண்ணான் உலகமும் கெடுமே’ (புறம்.184:11) 22

என்று சமூகம் பழித்தது.

**புறநானூற்றிpல் சமுதாயம்:**

புறநானூறு என்றவுடன் போர் நிகழ்வு மட்டுமே காட்சியாக நினைவுக்கு வருகின்றது. போர் செய்ததன் வழியாகக் கிடைக்கப்பெறும் புகழ் என்பது மற்றுமொரு ஒழுக்கமாகும். பாடப்படும் ஆண்மகனின் ஒழுக்க உணர்வுகளை வெளிப்படுத்துவது பாடாண் திணையாகும். வீரத்திலும், போரிலும், ஈகையிலும் வல்லமை படைத்தவனாக இருப்பவனே பாடப்படும் தகுதியை உடையவனாக இருந்திருக்கின்றான். மன்னனையும்-வீரர்களையும் மையமாகக் கொண்டு பெரும் பண்பாட்டை இலக்கியமாக மனிதச் சமூகத்திற்குக் கொடையாக அளித்த சங்கப்புலவர்கள், மனிதப்பண்பை வளர்ப்பதற்கான பாதையைப் பதிவு செய்ததுடன் பண்பாட்டோடு சில பொதுவான செய்திகளையும் பதிவு செய்துள்ளனர் என்பதை இவ்வியல் விளக்கி நிற்கின்றது.

“சங்க காலத்திற்கு முன் தமிழகத்தில் நிலை கொண்டிருந்த சமுதாயம் இன வேறுபாடற்ற சமுதாயம் ஆகும். அச்சமுதாயம் இனக்குழுச் சமத்துவ வாழ்க்கையின் அடிப்படையில் உலகெங்கும் நிலவின. தமிழகத்தில் இனக்குழுக்கள் திணைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டிருந்தன. இப்பாகுபாடு மானிடவியல் விளக்கத்திற்கும் பொருந்தி வருவதைப் பி.டி.சீனிவாச அய்யங்கார் போன்ற அறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்” இனக்குழுக்களாக வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும், உணவு சேகரித்தும் வாழ்க்கை நடத்தி வந்தனர். பகுத்துண்டு வாழ்ந்த இவ்வேட்டைச் சமுதாயத்தில் தாய்வழிச்; சமுதாயமே தோன்றியது. பெண்உறவும் தாயன்பும் பெண்ணிற்கு முதலிடம் தந்தன. காடுகிழாள், கொற்றவை போன்றவை சமுதாயத் தெய்வங்களாக விளங்கி வந்தன. வேலைப் பிரிவினைக்கு அச்சமுதாயத்தில் இடம் இருந்ததில்லை. கால்நடை வளர்க்கும் குலங்கள் பிரிந்துபோன நிலைதான் சமுதாய வழியில்

ஏற்பட்ட முதல் மாபெரும் வேலைப்பிரிவினை என்பர் ஏங்கல்சு” வேட்டைச் சமுதாயம் பிற்காலத்தில் தந்தவழிச் சமுதாயமாகத் தோன்றுகிறது. வேளாண் தொழிலில் மாடுகள் இழுக்கும் கலப்பை பயன்படுத்தப்பட்ட பிறகு தாய்வழிச் சமுதாயம் நீக்கப்பட்டது. இனக்குழுவின் சமூகச் சிக்கல்களை முடிவு செய்ய மன்றம், நாளிருக்கை, நாளவை ஆகிய இனக்குழப் பொதுக்கூட்டங்கள் இருந்தன. உணவு சேகரிப்போர், வேட்டையாடுவோர், பண்டைய வேளாண்குழுவினர் (புராதன விவசாயம் செய்வோர்), கால்நடை வளர்ப்போர் ஆகியோர் வாழ்ந்த இனக்குழுச் சமுதாயத்தில் குழு ஒற்றுமையும், குலச்சமத்துவமும் அவர்களுடைய வளமையாக இருந்தன

தமிழரின் ஆதிகால வரலாற்றை அடையாளப்படுத்த இலக்கியங்கள் துணை போகும்போது இலக்கியக் காலகட்டமே புலவனின் பண்பாட்டு வரலாற்றின் முதற் புள்ளியாக அமைந்து விடுகின்றது. தமிழரின் இலக்கிய காலத்திற்கு முன்பு மனித வாழ்வு, குறிப்பாகத் தமிழரின் வாழ்வு பண்பட்ட வாழ்வாகவே தென்படுகின்றது. இலக்கிய வளர்ச்சி, இலக்கியப்பதிவு என்பதும்கூட கடந்த மக்களின் வரலாற்றின் எச்சம் என்றே கருத முடியும். இக்கருத்து சங்க இலக்கியத்திற்கு சாலப் பொருத்தமாக அமையும்.

**சமுதாய விழுமியம்:**

மனித இனம் கூடிவாழும் மிகப்பெரிய சமுதாயம் ஆகும், ஒருவனோடு மற்றொருவனும், மற்றொருவனோடு இன்னொருவனும் தொடர்பு கொண்டு வாழும் ஒரு கூட்டு வாழ்க்கையைச் சமுதாயம் என்ற சொல்லால் குறிக்கின்றோம். ‘சமூகம்’ என்ற வார்த்தையிலிருந்து தொடர்புடையதேயாகும். மனித வரலாற்றைத் தேடிப் பார்க்கும் போது அழைத்திருந்தோம். ஒவ்வொரு கூட்டமாக வெவ்வேறு இடங்களில் தொடர்புகளற்று மக்கள் இனம் வாழ்ந்து வந்தது. தனித்தனி இனமாக வாழும் மக்களுக்கிடையே எந்தவித் தொடர்பும் இல்லாமல் தனித்தனியே வாழ்ந்திருகின்றனர். இக்குழு வாழ்க்கையைச் சமூகம் என்ற சொல்லாலும், வரலாற்றில் ஷஇனக்குழுச்சமூகம்’ என்ற சொல்லாலும் அடையாளப்படுத்தியுயுள்ளனர்.

ஒவ்வொருவரும் தன் தேவைகளையும், தன்னைச் சார்ந்தவர்களின் எதிர்ப்பார்ப்புகளையும் பூர்த்தி செய்து போகும் போதும், தன்னைப் பற்றிய தேவைகளய்ும் இருத்தல்களையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையில் இருக்குமு; மற்றொருவனின் நிலை பற்றிச் சிந்திக்க மற்றொரு மனிதனோ, குழுவோ தேவைப்படுகின்றது. இதனையே அரசு என்றும் அரசு போன்று செயல்படும் சேவை நிறுவனம் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். அரசு மக்கள் என்ற தொடர்நிலையுடன் கூடிய அமைப்பே ‘சமுதாயம்’ என்ற சொல்லால் அடையாளப் படுத்தப்படுகிறது அரசு என்ற அமைப்பின் செயல்பாட்டின் அரசுகளினால் நிறைவு செய்ய முடியத பல செயல்களை அரசு சார்ந்த அமைப்புகளும், மக்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் செயல்படத் துவங்குகின்றன. மற்றவருக்கு உதவி செய்தல், கற்றவருக்காகச் சிந்தித்தல், இச்சக்கி பரவலாக்கப்படும் போதுதான் அது குழுவின் வெளிப்பாடான மாறிவிடுகின்றது. இதுபோன்று தனிமனிதனுக்குள் உதித்த சிந்தனையே பழங்காலத்தில் ஓர் இனக்குழுவிலிருந்து மற்றொரு இனக்குழுவுடன் தொடர்புபடுத்தி, வாழ்க்கைத்

தேடலின் விரிவையும், மனிதத்தேவையின் அழுத்தத்தையும் புரித்து கொள்ள முற்பட்டது. அரசும், சமுதாயக் குழுக்களும் உருவாகாத கால கட்டத்தில், தனிமனித உணர்வுகளில் உதித்த உயர் சிந்தனைகள் சமுதாயம் என்ற அமைப்பைச் சீர்மையுடன் நடத்திச்செல்ல முற்பட்டது. மக்களிடமிருந்து அனுபவங்களால் விளையும் சிந்;தனைகளே மனிதனை உட்டியும் வெட்டியும் வாழச்செய்தன. ஆக மக்கள் கூட்டத்திலிருந்து, மக்களின் உயர் வாழ்க்கையைச் சீரமைப்பதற்கான, மக்களால் வெளிக்கொணரப்படும் சிந்தனையை உயர்விழுமியதாக இனங்காண முடியும். அத்தகைய வெளிப்படும் உயர் பண்புநெறிகள் மனிதனை நெறிப்படுத்தும் வகையில் இலக்கியங்களாகத் தோற்றம் பெற்றன. மனித வரலாற்றின் உயர் பண்புநெறிகளாகக் கருதப்படும், தமிழினத்தின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் புறநானூறு என்னும் இலக்கியத்தின் வழியாக வெளிப்பட்டிருக்கும் உயர் பண்புக்கூறுகள் தற்கால மனிதத் தேவையின் அவசியமாகிவிட்டது. அவ்வுயர் பண்புநெறி சமுதாயத்தில் விளைவிக்கும் விழுமியமாக இனங்காணப்பட்டுள்ளது.

**புறநானூற்றில் சமுதாய விழுமியம்:**

சங்க இலக்கியத்தில் புறச்செயதிகளை உள்ளடக்கிய புறநானூறு என்பது வரலாற்றுப் பிரதிபலிப்பாகவும், பண்பாட்டை வலியுறுத்தும் பொதுப் பண்பாடு நூலாகவும் அமைந்துள்ளது. ஒரு பண்பாடானது வெளிப்படும் போது சமகால மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து எதிர்கால மக்களின் வாழ்நிலைக்குத் தீர்வு சொல்லாமல் செல்வதுண்டு. எதிர்காலச் சிந்தனையோடு பாடப்பட்டிருக்கும் ஒழுகலாறுகள், நிகழ்காலச் சமூகத்துடன் பொருந்தாமல் விலகிச் செல்வதுண்டு. புறநானூற்றில் வெளிப்பட்டிருக்கும பண்புநெறி மனிதனின் அனைத்து நிலைகளிலும் காலங்கடந்து அனைத்துத் தரப்பு மக்களுக்கும் உயிர் ஊட்டுவனவாக அமைந்து விடுகின்றன. அக்காலத்தில் வெளிப்படுத்தியிருக்கும் நோக்கம் எதுவாயிருந்தாலும், தற்பொழுது அனைத்து மக்களின் வாழ்நிலையை மேம்படுத்துவதற்காக இந்த உயர்பண்பு நெறிகள் பயன்படுகின்றன. சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த புலவர்கள் பண்பாட்டுடன் கூடிய தமிழை வளர்த்தெடுப்பதில் கவனமாக இருந்திருக்கின்றனர். இலக்கியத்தில் பண்பாடு தோன்றிய தேவை எதுவாக இருந்தாலும அது ஒட்டுமொத்தச் சமூகத்தின் தேவையாகிவிட்டது. சங்கம் அமைத்துச் செய்யள்பாடி ஆங்காங்கே, விட்டுச் செல்லப்பட்டு மன்னர்களின் தலைமையில்; தொகுக்கப்பட்ட சங்க இலக்கியத்தில் மக்களின் வாழ்வியலைப் பெரிதும் போற்றிப் பாடும் புறநானூறு, பல்வேறு காலகட்டங்களின் பல்வேறு செய்திகளையும் உள்ளடக்கி இன்றுவரை சமூக அறங்களைப் போதிக்கும் ஒழுக்க நூலாகச் செயல்பட்டு வருகின்றது. ஈகை, கொடை, நட்பு நிலையாமை உணர்த்தும் வாழ்க்கை, கல்வி, சான்றாண்மை போன்றவற்றை மக்கள் மனதில் இருந்தி மனித நேயத்தை வளர்க்கும் நூலாகவும் புறநானூறு திகழ்கின்றது.

இலக்கியங்கள் திடீரென்ற தோன்றுவதில்லை, நிகழ்கால மக்கள் சமூகச் சூழலையும் உட்கொண்டு தீர்வாகவும், சில நேரங்களில் இயல்பாகவும் தோன்றிச் சமூகத்தளத்தில் இயங்கும் மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகின்றன. புறநானூற்றில் வெளிப்படும் உயர்பண்புநெறிகள் சமகாலத்தின் தேவைகளை நிறைவு செய்தும், காலம் கடந்தும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. சமகாலத்தில்

வெளிப்பட்டிருக்கும் பண்பாட்டின் வழியாகத் தமிழக மக்களின் கோட்பாடுகளையும், வாழ்தலையும் அடையாளப்படுத்தும் விதமாக, சமுதாய விழுமியங்களாகப் புறநானூற்றுப் பண்புநெறிகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

**கல்வி:**

மனிதனின் வாழ்நிலையைத் தீர்மானிப்பது கல்வியாகும். கல்வி என்பது கற்பது. படித்தல்,கற்றல் என்ற இரண்டு சொற்களும் ஒன்றின் தொடர்ச்சி மற்றொன்றாகவும் சில வேளைகளில் ஒன்றில்லாமல் மற்றொன்றாகவும் இயங்கக் கூடியதாகும். படித்தல் என்பது வரிவடிவங்களாக உள்ள எழுத்துக்களைப் பொருளுடன் அடையாளப் படுத்துவதாகும். படிப்பு என்னும் செயல்பாட்டினை அறிந்து அவற்றினைப் பயன்பாட்டினாலும், தன்னுடைய அனுபவத்தினாலும் வெளிப்படுத்துவது கல்வி. கற்றல் எனும் போது கேட்டல், எழுதுதல், படித்தல், பேசுதல் ஆகிய திறன்களில் சிறப்பு வாய்ந்ததாகக் கொள்ளப்படுவதாகும். படிப்பதோடு சுய அனுபவத்துடன் உலகியலறிவைச் செயல்வடிவம் பெற்றுத் தருவது கல்வியாகும்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” 23

என்னும் வள்ளுவரின் வாக்கும் வெறுமனே படிப்பை அல்லாமல் கற்றலை உறுதிப் படுத்துகின்றது. மணலில் எழுதப் பழகிய பின்பு பனை ஓலைகளில் எழுதி, பின தொழில் நுட்பப்புரட்சியினால் அச்சுப்படிகளின் வாயிலாகப் பழத்தல் நடைபெற்று, எழுதுதல், வளர்ச்சி பெற்றுள்ளது. மனிதனின் ஆளுமையையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கும் கற்றலின் தேவையைச் சமூகத்தளங்களுக்கேற்ப அறிஞர்களும், தத்துவ ஞானிகளும் வலியுறுத்தியே வந்துள்ளனர். தாங்கள் அனுபவித்த அனுபவங்களை இலக்கியங்களாக வெளிப்படுத்திக் கல்வியின் முழுப் பொருளாழத்தை உணர்ந்த புலவர்கள் கல்வியின் சிற்பபையும் எடுத்தோதி உள்ளனர்.

“கல்வியினால் அறிவுக்கண் உண்டாகும். கல்வி, மெய்ப்பொருள் அல்லது தத்துவத்தினை விளைவிக்கும்இ துன்பத்திற்கு உதவியும் ஆகும். கல்;வியினால் பொருள்களும் உண்டாகும், புகழும் உண்டாகும். என்வே கல்வியை ஒழிந்த மற்றவை பொருள்களல்ல. அதனால் துன்பக்காலத்திற்கென வைத்திருக்கும் பொருளைக் கொடுத்தேனும் கல்வி கற்கவேண்டும் (சீவக சிந்தாமணி.1592) என்று கல்வியின் சிறப்பையும் அதனால் பெற வேண்டிய இன்றியமையாமையும் சீவக சிந்தாமணி குறிப்பிடுகின்றது”

**அரசியல் நீதி:**

அரசியல் நீதி என்பது ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்குமிடையே நியாயமில்லாத வேறுபாடு அரசியல் அரங்கில் நிலவாமல் இருப்பது, அரசியல் நீதியை உறுதி செய்யும்பொருட்டு,அறிமுக உரையில் அது குறிப்பிடப்படுகிறது. இந்தியப பிரதேசத்தில் ஒவ்வொருவருக்கும் இது இன்றியமையாததாகும். தனியுரிமை மற்றும் கல்வித் தகுதிகளில் வேறுபாடு இருந்தாலும், மற்ற நபர்களைப் போல அரசியல் அரங்கில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்த பார்வையை நோக்கமாக கொண்டுதான் உலகளாவிய அளவில் வயதுவந்தோருக்கான வாக்குரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த

பொருளில்தான், மத்திய மற்றும் ஒவ்வொரு மாநிலங்களின் சபை உறுப்பினர்கள் ஒவ்வொரு 5 ஆண்டும் ஒரு மனிதருக்கு ஒரு ஓட்டு என்ற கொள்கையின் அடிப்படையில், வாக்களிக்கத் தகுதி படைத்த மக்களில் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**மக்களாட்சி:**

தங்களின் சாதி,சமய வேறுபாடுகளுக்கு இடையே, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம வாய்ப்பு அளிப்பது, இந்த ஜனநாயக இலட்சியதில், பொது வேலைவாய்ப்பு என்ற வி~யமும் அமல்படுத்தப்படுகிறது. அரசியலமைப்புச்சட்டம் அளித்துள்ள பாதுகாப்பு இருந்த போதிலும் கூட, சிறுபான்மையினரை நடத்துவதில், அதிகாரத்தில் இருப்பவர்களால் புறக்கணிக்கப்பட்டு விடக்கூடாது என அரசியலமைப்புச் சட்டத்தின் தத்துவத்தில் தெளிவாகக் குறித்து காட்டப்படுகிறது. இதில் உண்மை என்னவெனில், உச்சநீதிமன்றத்திலும் வெளியுறவு நிர்வாகங்களிலும் மத்திய, மாநில அமைச்சரவைகளில் முஸ்லீம் மற்றும் கிறிஸ்துவ சமூகத்தினர் இருக்கும் வகையில் ஒரு விதிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வி~யத்தில் இது இல்லாமல் எந்த ஒரு அரசியலமைப்புச் சட்ட ஒதுக்கீடும் இல்லை. ஒவ்வொரு குடிமகனும் இந்த நாடு தன்னுடையது என அவசியம் உணர வேண்டும் என்ற பெயரில், அரசியலமைப்புச் சட்டத்தில் பணியாற்றுவோர் அதன் உண்மையான உணர்வை தவற விட்டு விடக்கூடாது என்பதைப் போதுமான அளவு வெளிப்படுத்துகிறது.

**ஒரு ஜனநாயக சமூகம்:**

'நல்வாழ்வு நாடு' என்ற கருத்தின் உள்ளடக்கத்துடன், அனைத்து மக்களின் நலனை இந்த ஜனநாயகக் குடியரசு முன்நிறுத்துகிறது. இது மாநிலக் கொள்கையில் உத்தரவு கொள்கைகளின் தாக்கமாகும். முகவுரையில் உறுதி அளிக்கப்பட்ட பொருளாதார நீதி, அரசியலமைப்புச் சட்டத்தால் எதிர்நோக்கப்படும் பட்சத்தில், அரியதாகத்தான் அதனை அடையமுடியும். அங்கே ஒரு அரசியல் ஜனநாயகமாக அது வரையறுக்கப்பட்டுள்ளது. பண்டிட் நேருவின் வார்த்தைகளில்

"கடந்த காலங்களில் ஜனநாயகம் அதிகம் பேசப்பட்டது. அரசியல் ஜனநாயகத்தில், ஒவ்வொருவருக்கும் ஓட்டு என்ற தோராயமான பிரதிநிதித்துவம் கொண்டிருந்தனர். ஒரு நபர் கீழிறங்கவும் மற்றும் வெளியேறவும், கூடிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாக அந்த ஓட்டு இல்லை. அந்தத் தவிப்பும், பசியும் ஒரு நபருக்கு இருந்தது என்று நான் சொல்கிறேன். பொருளாதார ஜனநாயக நடைமுறைகளைச் சீராக அதிகப்படுத்தி அடைவதற்கு, சம உரிமை மற்றும் பிறரது வாழ்க்கா்யில் நல் எண்ணங்களைப் பரப்புதல் ஒட்டுமொத்தமாக ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படுவது உள்ளிட்ட சிலற்றுக்கு இதனை உபயோகிக்கலாம் என்பதைத் தவிர அரசியல் ஜனநாயகம் தமக்குள்ளே போதுமானதாக இல்லை."

ஏழை மக்கள் வேலைக்காகவும், ஊதியத்திற்காகவும் பட்டினியாகச் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் வாழ்க்கை தொடர்ச்சியாக பட்டினியாகச் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் வாழ்க்கை தொடர்ச்சியாக இனிவான வேதனையாகவும் வறுமையாகவும் இருக்கிறது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கோ அல்லது அதன் சட்டங்களுக்கோ பெருமையாக இல்லை.

**இந்திய ஜனநாயகம்:**

சுருக்கமாக, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ரீதியான ஜனநாயகத்தை மட்டுமின்றி, சமூக ஜனநாயகத்தையும் அளிக்கிறது. அரசியலமைப்புச் சட்ட நிர்ணயசபையில தமது முடிவுரையில் டாக்டர் அம்பேத்கார் இதனை விளக்கி உள்ளார்.

சமூக ஜனநாயகம் எனும் அடிப்படை இருந்தால் ஒழிய அரசியல் ஜனநாயகம் நீடிக்க முடியாது. சமூக ஜனநாயகத்தின் அர்த்தம் என்ன? சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அங்கீகரிக்கும் வாழ்க்கை முறையை தரும், மூம்மூர்த்திகளில் மட்டும் தனியாக பிரித்துப் பார்க்கக் கூடாது. மும்மூர்த்தியும் இணைந்த ஒரு மைய அமைப்பை, ஒன்றில் இருந்து இன்னொன்று விலகும் போது, ஜனநாயகம் தோற்றுவிடும் என்ற உணர்வுடன் அவர்கள் உருவாக்கி உள்ளனர். சமத்துவத்தில் இருந்து சுதந்திரம் விலக முடியாத, சுதந்திரத்தில் இருந்து சமத்துவம் விலக முடியாது. சகோதரத்துவத்தில் இருந்து சுதந்திரமோ சமத்துவமோ விலக முடியாது.

நாட்டின் ஜனநாயகச் சமுதாயம், அதன் சுதந்திரமான, சரிசமமான அனைத்து குடிமக்களிடம் இருக்கும் நடுநிலைமை மற்றும் ஒத்துழைப்பில் இருந்து அதன் வலுவைப்பெறுகிறது. இந்திய ஆட்சி அமைப்பில் சமூக மற்றும் பொருளாதார ஜனநாயகம் அடிப்படையாக இருக்கிறது. அதில் அரசியல் ஜனநாயகம் வாழ்க்கை முறையாக இருக்கிறது.

**பொருளாதார நீதி:**

வறுமை ஒழிப்பு என்பது, இருப்பவர்களிடம் பறிப்பது அல்ல. ஆனால் தேசிய சொத்து மற்றும் வளங்களைப் பன்மடங்காக்குதல் மற்றும் சரிசமமாகக் பகிர்ந்தளித்தல், இருந்து அனைத்து தரப்பில் இருந்து உற்பத்தியை நோக்கிப் பங்களித்தல், ஆகியவைதான் உத்தரவு கொள்கைகள் வழியே நாட்டின் கொள்கையாக திட்டமிடப்பட்டிருக்கிறது. இந்த குறிக்கோளை அடைய வேண்டும் என்ற அளவில் நமது துணகை;கண்டத்தில் பொருளாதார ஜனநாயகத்தை வேண்டும் என்ற அளவில் நமது துணைக்கண்டத்தில் பொருளாதார ஜனநாயகத்தை நிறுவ வேண்டும். சுருக்கமாக, ஒரு வளம் மிக்க நாடு பொருளாதார ஜனநாயகத்தை தோற்றுவிப்பதே பொருளாதார நீதியின் குறிக்கோளாகும்.

**சமூக நீதி**

சமூக நீதி ஒரு அடிப்படை உரிமையாக இருக்கிறது. சட்டத்தின் மூலம், சமூக சமநிலையின்மையை நீக்கும் ஒருங்கிணைந்த அமைப்பாக சமூக நீதி இருக்கிறது. சமூக கட்டமைப்பில் உள்ள அல்லது தனிப்பட்ட போட்டிக் கூறுகள் அல்லது பல்வேறு வித்தியாசமான குழுக்கள் அல்லது பிரிவுகள் மூலம், மட்டுமே ஒரு நலன்மிக்க நாடாக உருவாக்கும் சாத்தியம் உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் குடிமக்களுக்க சமூக, பொருளாதார, அரசியல் நீதிகள் வழங்கப்பட்டுள்ளது. நமது மக்கள் தொகையில் பெரும் எண்ணிக்கையில், வேண்டுமென்றே துயரத்தை ஏற்படுத்தும் வகையில் குருட்டுக் கண்ணாக மாற்றும் கொள்கைகளுக்கு மன்னிப்பு அளிக்கக் கூடாது.

**தனிமனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்:**

இங்கிலாந்தின் அரசியலமைப்புச் சட்டமானது எழுதப்படாத ஒன்றாகும். அமெரிக்க அரசியலமைப்புச் சட்டம் அல்லது உலகின் எழுதப்பட்ட எந்த அரசியலமைப்புச் சட்டம் போல இங்கிலாந்து அரசில் அடிப்படை உரிமைகளுக்கான குறியீடுகள் இல்லை. இதனால் இங்கிலாந்தில் தனிமனிதனுக்கு உண்டான அடிப்படை உரிமையின் அங்கீகாரம் இல்லை என்பதல்ல. அதற்குக் காரணம் அவை இல்லாமல் ஜனநாயகமானது அர்த்தமற்றதாகிவிடும்.

**இங்கிலாந்தின் அரசியலமைப்பின் நிலை**

அங்குள்ள தனி மனிதன் தன் விருப்பத்திற்கேற்ப எந்த நடவடிக்கைகளையும் எடுக்க உரிமை மற்றும் சுதந்திரம் உண்டு. ஆனால் அவை அந்த மண்ணின் சாதாரண சட்டத்தின் எந்த ஒரு விதியையும் மீறாமல் இருத்தல் வேண்டும். இதனால் இங்கிலாந்தின் அடிப்படை உரிமைகளின் அடித்தளமானது எதிர்மறையானது என கூறப்படுகிறது.

தனிமனித விடுதலையானது நீதிமன்ற தீர்ப்புகளினால் பாதுகாக்கப்படுகிறது. நீதிமன்றத்திற்கு முன் வரும் சில குறிப்பிட்ட வழக்குகளில் தனிமனித உரிமைகளைத் தீர்மானிப்பது இந்த நீதிமன்றத் தீர்ப்புகள்தான்.

வேறு எங்கும் போல இங்கிலாந்திலும் நீதித்துறையே அடிப்படை உரிமையின் பாதுகாவலனாக உள்ளது. ஆனால் அடிப்படை வேறுபாடுகள் உள்ளன. இங்கிலாந்தில் நிர்வாக கொடுங்கோலுக்கு எதிரான தனிநபரை பாதுகாக்க நீதிமன்றத்திற்கு முழுமையான அதிகாரம் உள்ளது. தனிநபர் உரிமை மீதான சட்டமன்ற ஒடுக்குதலுக்கு எதிரானவற்றில் நீதிமன்றங்கள் அதிகாரமற்றதாகிறது. சுருக்கமாக இங்கிலாந்து சட்டமன்றத்தை கட்டுப்படுத்த எந்த அடிப்படை உரிமைகளும் கிடையாது. ஆங்கில பாராளுமன்றமானது சர்வ வல்லமையுள்ளதாக இருப்பதால் அதனை மாற்றுவதற்கு எந்தச் சட்டமும் கிடையாது மற்றும் இயலாது. முன் கூறியது போல் தனிநபருக்கு உரிமைகள் உண்டு, ஆனால் பாராளுமன்றத்தின் மற்ற சட்டங்களைப்போல் மாற்றக்கூடிய ஒரு மண்ணின் சாதாரண சட்டமாகவே உள்ளது. ஆகையால் அடிப்படை என்று கூறும் அளவுக்கான உரிமைகள் அங்கு இல்லை.

ஆங்கில நீதிமன்றங்களுக்கு சட்டங்கள் மீது நீதித்துறை பாரிசீலனைக்கான எந்த அதிகாரமும் இல்லை என்பதே இந்த பாராளுமன்ற ஏகாதிபத்தியத்தின் மற்றொரு விளைவாகக் கூறப்படுகிறது. எந்த ஒர் அடிப்படை அல்லது இயற்கை உரிமையை மீறுதலின் அடிப்படையில் எந்;தச் சட்டமும் அரசியலமைப்புக்கு விரோதமானதாக அறிவிக்க முடியாது.

ஆனால் ஒரு மொழியானது மத்திய அரசாங்கத்தின் நோக்கங்களுக்காக பரிந்துரைக்கப்பட்டது மற்றும் அரசியலமைப்பு இயற்றியவர்கள் பிராந்திய மொழிக் குழுக்களுக்கு நிவாரணம் அளிக்க அந்தந்த மாநிலக் சட்டமன்றங்கள் (சரத்து 345) 24 மற்றும் ஜனாதிபதியின் மூலம் (சரத்து-347) சில மொழிகளை அல்லது ஹிந்தி அல்லாத மொழிகளை மாநிலங்களுக்குள்ளான அதிகாரபூர்வ நடவடிக்கைகளுக்கு அல்லது வேறு எதற்காகவும் பயன்படுத்த அங்கீகாரம் தரப்படவேண்டும் என்கிறது.

இந்த விதிகளின்படி மாநிலத்துக்குள்ளான அதிகாரபூர்வ மொழியாக அவர்கள் பேசப்படும் மொழியையே அங்கீகரிக்க மாநில சட்டமன்றத்தின் பெரும்பான்மையுடன் மற்றும் பெருவாரியான மக்கள் பேசப்படும் மொழிகளை அங்கீகரிக்கிறது. இதன் விளைவாக, அரசியலமைப்பின் விதிகள் அதிகாரபூர்வ தொடர்பான மொழி ஒரளவு சிக்கலாக உள்ளது (சரத்து 343-351). 25

அரசம் சமூக மதிப்பீடும்:

தனிமனிதன் ஒருவனின் நற்சிந்தனைகள் என்பவை, நல்ல குடும்ப உறவை வேராகக் கொண்டு கிளைத்தெழுகின்றன. தனிமனிதச் சிந்தனை, நல்ல குடும்ப அமைப்பு, சிறந்த உறவுமுறை, பாதுகாப்பு உணர்வு என்பனவற்றில் அரசின் செயற்பாடு முக்கியப் பங்கினை வகிக்கிறது. மக்களின் சுய சிந்தனைக்கும், அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் சுதந்திரத்திற்கும் இடமளிக்காத சட்ட திட்டங்களைக் கொண்டுள்ள அரசு 'கொடுங்கோலாக' கருதப்படும். எனவே, ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் முன்னேற்றத்தில், அவற்றின் முதன்மை காரணியாகிய தனிமனிதர், நிறுவனங்களான குடும்பம் மற்றும் அரசு ஆகியவற்றின் செயல்பாடுகள் முதன்மை பெறுகின்றன. அவற்றிலும், குறிப்பாக அரசு என்று சொல்லக்கூடிய சமூகத் தலைமையின் பொறுப்பு மற்ற எல்லாவற்றையும் தன் கட்டுக்குள் அடக்கியதாக அமைகிறது. எனவே, சமூக முன்னேற்றத்தில் அரசின் பங்கு முதன்மையானதாகக் கருதப்படுகிறது. பழந்தமிழ்ச் சமூகத்தில் மக்களுக்கு மன்னன் உயிராகவும் (புறம்.186:1,2) மன்னனுக்கு மக்கள் உயிராகவும் (மணி.7:11,12) 26 மதிக்கப்பெற்றனர். எனவே, பிறரால் விளையும் கேட்டைவிட ஆள்பவர் தீச்செயலால் மக்கள் அடையும் துன்பம் அதிகம் என்பதையும், ஆள்பவர் ஒழுங்கில்லை என்றால், அச்சமூகம்,

'ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோல்'(கலி.5:12) 27

துன்பமுறும் என்றும் அறிவுறுத்தினர். இவ்வகை முக்கியத்துவம் வாய்ந்த தலைமைக்கென்று சில அடிப்படைப் பண்புகளையும், தகுதிகளையும் பழந்தமிழ்ச் சமூகம் வரையறை செய்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு-16 (2) "குடிமகன் எவரையும் சமயம், இனம், சாதி,பாலினம்,பாரம்பரியம், பிறப்பிடம், உறைவிடம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றைக் காரணம் காட்டி, அரசுப்பணியில் நியமிக்கப்படுவதற்கும் அல்லது வேறு எந்தப் பணி ஆற்றுவதற்கும் தகுதியற்றவர் என்று கூறவும் பாகுபாடு காட்டவும் கூடாது"28என்பதை வரையறுத்துக் கூறுகிறது.

இத்தகைய அடிப்படை உரிமைகளைக்காத்துக்கொள்ள,குடிமக்கள் யார் வேண்டுமானாலும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர உரிமை உண்டு என்பதை இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 32 குறிப்பிடுகிறது.

மேற்குறித்த இச்சட்ட வரையறைக்கு முன்னோடியாத் தமிழ்ச் செவ்வியல் நூல்களில் திகழ்வதைக் காணலாம்.

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" (புறம்.பா.192) 29

என்ற புறநானூற்றுப் பாடலை இயற்றியவர் கணியன் பூங்குன்றனார். இப்பாடல் சாதி, மதம், இனம், பாலினம் கடந்த சமத்துவத்தை, மனித நிலைப்பாட்டை வலியுறுத்துகிறது. இன்று மனிதர்களுக்குள்

பிரிவு ஏற்பட்டு மனித இனம் பல்வேறு தேசமாகவும் நாடுகளாகவும் பிரி;வுற்று இருக்கின்றன. இவை, மனிதன் உருவாக்கிய செயற்கை எல்லைகளே. இதைத்தாண்டி மானுடர் யாவரும் ஓரினம், ஒரு குடும்பம் என்ற வகையில்,“யாதும் எம்முடைய ஊர் என்னும், எல்லோரும் நம் உறவினர்” என்றும் கூறும் இந்த மிகச்சிறந்த கோட்பாடு இன்றைய சர்வதேசச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையாகப் (குரனெயஅநவெயட Pசinஉipடநள ழக ஐவெநசயெவழையெட டயற) போற்றத்தக்கது.

இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு-3 ஆனது பொருள்கோளுக்கான வகைமுறை என வரையறை செய்யப்பட்டுள்ளது.அதாவது, ஒரு தீர்ப்பு தவறாக வழங்கப்பட்டுள்ளது என்பதை ஆயவநசயைட நுஎனைநnஉந மூலமாகத் தீர்ப்புரையின் தவறை எடுத்துரைப்பது ஆகும்.

இதனைச் சிலப்பதிகார வழக்குரைக்காதையில் கண்ணகி பாண்டிய மன்னனிடம் சிலம்பை உடைத்து வாதிட்டது மூலமாக, செவ்வியல் இலக்கியங்களில் இன்றைய சாட்சியச் சட்டம் மிகச்சரியாகப் பொருந்தி இருப்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை:**

இவ்வாறாக நமது சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட சடடம் சார்ந்த கருத்துகள் அனைத்தும் தற்போது எழுதப்பட்ட சட்டங்களாக இயற்றப்பட்டு நடைமுறையில் இருந்தவருகின்றன. நமது எழுதப்பட்ட சட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு நன்மை அளிக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ளன. அதற்கு முன்னோடியாக நமது செவ்வியல் இலக்கியங்கள் விளங்குகின்றன.

**References**


1. Seenivasan, P. (Ed. & Comm.). (n.d.). *Silappathikaram: Moolamum Uraiyum* [Silappathikaram: Original Text with Commentary]. Aniyagam, Chennai.
2. Chandrasekar, A., & Seetharaman, C. (n.d.). *Indiya Thandanaith Thoguppu Sattam* [Indian Penal Code] (33rd ed.). C. Seetharaman & Co., Chennai.
3. Varadarasanar, M. (Comm.). (n.d.). *Thirukkural* (R. Panchavarnam, Comp.). Thiruvalluvar Pathippagam, Panruti. Meenakshi Sundaranar. (n.d.). *Purananuru*. Varathanar Pathippagam, Chennai.
4. Maheswari, M. (n.d.). *Akananuru*. Ramani Achagam, Thanjavur.
5. Puliyur Kesikan. (n.d.). *Manimekalai*. Bharathi Nilayam, Chennai.
6. Chandrasekaran, A. (n.d.). *Mudhanmai Kutraviyal Sattangal* [Primary Criminal Laws]. Star Law Books East Visalam Road, Madurai.
7. Ramachandran, T. R. (n.d.). *England Arasiyal Amaippin Varalaru* [History of the English Political System]. Nanbargal Achagam, Madurai.
8. Manohar, V. R. (n.d.). *Indiya Arasiyal Amaippu Sattam* [Indian Constitution]. Giri Law Book Centre, Salem.
9. [Author Unknown]. (n.d.). *Thamizhaga Varalaru Sangakaalam - Vazhviyal* [History of Tamil Nadu: Sangam Period - Lifestyle]. [Publisher Unknown], [Place Unknown].
10. Puliyur Kesikan. (2017). *Kalithogai* (2nd ed.). [Publisher Unknown], Chennai.
11. Ramanathan, R. (2004). *Inna Narpathu* (1st ed.). Uyirmai Pathippagam, Chennai.


**License**

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Tamilmanam